# 11 ஜூலை 2023 தினசரி நடப்பு நிகழ்வுகள்

## முக்கிய தினங்கள்


### 10 ஜூலை 2023 – தேசிய மீன் விவசாயிகள் தினம்

"தேசிய மீன் விவசாயிகள் தினம்" (NFFD) ஆண்டுதோறும் ஜூலை 10 ஆம் தேதி இந்தியா முழுவதும் மீன் வளர்ப்பாளர்கள், மீன்வளர்ப்பு தொழில் வல்லுநர்கள் மற்றும் மீன்வளத் துறையின் நிலையான வளர்ச்சிக்கான பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் அனுசரிக்கப்படுகிறது.

- ❖ ஜூலை 10, 2023 அன்று 23வது "தேசிய மீன் விவசாயிகள் தினம் (NFFD)" அனுசரிக்கப்படுகிறது.
- ❖ ஜூலை 10 தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் (NFDB) நிறுவன தினமாகவும் அனுசரிக்கப்படுகிறது.
- ❖ ஜூலை 10, 2023 அன்று 17வது "தேசிய மீன்வள மேம்பாட்டு வாரிய நிறுவன தினம்" அனுசரிக்கப்படுகிறது.
- ❖ 2001 ஆம் ஆண்டில், இந்திய அரசாங்கம் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 10 ஆம் தேதி தேசிய மீன் விவசாயிகள் தினமாக கொண்டாடப்படும் என்று அறிவித்தது.

### 11 ஜூலை 2023 – உலக மக்கள் தொகை தினம்

- ❖ உலகளாவிய மக்கள்தொகை வளர்ச்சியுடன் தொடர்புடைய சவால்கள் மற்றும் விளைவுகள் குறித்து தனிநபர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும், கல்வி கற்பதற்காகவும் ஆண்டுதோறும் ஜூலை 11 ஆம் தேதி "உலக மக்கள் தொகை தினம்" நினைவுகூரப்படுகிறது.




- ❖ கருப்பொருள் – "பாலின சமத்துவத்தின் சக்தியை கட்டவிழ்த்துவிடுதல்: நமது உலகின் எல்லையற்ற சாத்தியக்கூறுகளைத் திறக்க பெண்கள் மற்றும் சிறுமிகளின் குரல்களை உயர்த்துதல்".
- ❖ ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டத்தின் ஆளும் குழு "உலக மக்கள்தொகை தினத்தை 1989 இல்" நிறுவியது
- ❖ முதல் உலக மக்கள் தொகை தினம் ஜூலை 11, 1990 அன்று 90 க்கும் மேற்பட்ட நாடுகளில் அனுசரிக்கப்பட்டது.

## செய்திகளில் இடம் பெற்ற மனிதர்கள்

### நீரஜா பிரபாகர், இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சிலுக்கான தலைவராக நியமிக்கபட்டுள்ளார்

- ❖ ஆந்திரப் பிரதேசத்தின் பெடவேகியில் அமைந்துள்ள "இந்திய எண்ணெய் பனை ஆராய்ச்சி நிறுவனம்", (IIOPR) "இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சிலுக்கான (ICAR) ஆராய்ச்சி ஆலோசனைக் குழுவின்" (RAC) தலைவராக "பி.நீரஜா பிரபாகர்" நியமிக்கப்பட்டுள்ளார்.

SHANMUGAM IAS ACADEMY


- திருமதி பிரபாகர் மூன்று வருட காலத்திற்கு பத்து பேர் கொண்ட குழுவை வழிநடத்துகிறார்.



- திருமதி பி.நீரஜா பிரபாகர், " தெலுங்கானா மாநிலம் ஸ்ரீ கோண்டா லக்ஷ்மன்" தோட்டக்கலை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ஆவார்.
- அடுத்த நான்கு ஆண்டுகளில் குறைந்தது 10 லட்சம் ஏக்கரை எட்டும் இலக்குடன், எதிர்காலத்தில் 20 லட்சம் ஏக்கரில் எண்ணெய் பனை சாகுபடியை விரிவுபடுத்துவது மாநிலத்தின் இலக்கு.

## விருதுகள் மற்றும் அங்கீகாரங்கள்

### பிரதமர் மோடிக்கு 'லோகமான்ய திலகர் தேசிய விருது'



- மகாராஷ்டிரத்தின் புணே நகரில் வரும் ஆகஸ்ட் 1-ஆம் தேதி நடைபெறும் நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடிக்கு லோகமான்ய திலகர் தேசிய விருது வழங்கி கௌரவிக்கப்பட உள்ளது.
- இது குறித்து திலகர் அறக்கட்ட ளைத் தலைவர் தீபக் திலக் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: 'பிரதமரின் விடாமுயற்சி மற்றும் செயல்பாட்டுகளைக் கவனத்தில் கொண்டு அவரது பணிகளைச் சிறப்பிக்கும் வகையில், நிகழாண்டு லோக மான்ய திலகர் தேசிய விருதுக்கு பிரதமர் மோடியை தேர்வு செய்துள்ளோம் என்றார்.
- .திலகரின் 103-ஆவது நினைவு நாளையொட்டி 'திலகர் தேசிய விருது' வழங்கி 'திலக் ஸ்மாரக் மந்திர் டிரஸ்ட்' கௌரவிக்க உள்ளது.

### ஆசியாவின் சிறந்த ஜீனியர் ஆண்கள் தடகள விளையாட்டு வீரர்




- 2023-ஆம் ஆண்டிற்கான "ஆசியாவின் சிறந்த ஜீனியர் ஆண்கள் தடகள விளையாட்டு" வீரராக மதுரையைச் சேர்ந்த விளையாட்டு வீரர் "செல்வபிரபு தேர்வு" செய்யப்பட்டிருந்தார்.
- சமீபத்தில் கொலம்பியாவில் நடைபெற்ற 20 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியில், "மும்முறை தாண்டுதலில் வெள்ளிப் பதக்கம் வென்ற முதல் இந்தியர்" என்ற சாதனையைச் செல்வ பிரபு படைத்திருந்தார்.
- ஆசிய தடகள சம்மேளனத்தின் சிறந்த வீரராக (20 வயதுக்குட்பட்டோர்) தேர்வு செய்யப்பட்ட தமிழகத்தை சேர்ந்த " மும்முறை தாண்டுதல் வீரர், செல்வபிரபு" பாங்காங்கில் , அந்த விருதை பெற்றுக் கொண்டார்.

# விளையாட்டு

## "சூப்பர் யுனைடெட் ரேபிட் மற்றும் பிளிட்ஸ் 2023 செஸ் போட்டிகள்"



- கிராண்ட் செஸ் சுற்றுப்பயணத்தின் ஒரு பகுதியாக "சூப்பர் யுனைடெட் ரேபிட் மற்றும் பிளிட்ஸ் 2023 செஸ் போட்டிகள்", குரோஷியா நாட்டின் ஜாக்ரெப் நகரில் நடைபெற்றன.
- இந்த தொடர் ரேபிட் பிரிவில் 9 சுற்றுகளையும், பிளிட்ஸ் பிரிவில் 18 சுற்றுகளையும் கொண்டதாக நடத்தப்பட்டது.
- முதல் நிலை வீரரான நார்வேயின் மேக்னஸ் கார்ல்சன் தனது 9 சுற்று ஆட்டங்களிலும் வெற்றி பெற்று 20 புள்ளிகளை பெற்றார்.
- இதில் ஃபேபியானோ கருனாவுக்கு எதிரான ஆட்டத்தில் கார்ல்சன் தோல்வியை சந்தித்தார். தொடர்ந்து போலந்தின் ஜான்–கிரிஸ்டோஃப் டூடாவுக்கு எதிரான ஆட்டத்தை டிராவில் முடித்தார். இதன் பின்னர் இந்தியாவின் குகேஷ், குரோஷியாவின் ஷாரிக், விஸ்வநாதன் ஆனந்த், ஈரானின் இயன் நெபோம்னியாச்சி ஆகியோரை தோற்கடித்து 25 புள்ளிகளுடன் சாம்பியன் பட்டம் வென்றார் கார்ல்சன்.
- அவருக்கு ரூ.33 லட்சம் பரிசுத் தொகை வழங்கப்பட்டது. "இயன் நெபோம்னியாச்சி" 22.5 புள்ளிகளுடன் 2–வது இடத்தையும்," ஃபேபியானோ கருனா" 21.5 புள்ளிகளுடன் 3–வது இடத்தையும், ஈரானின் "அலிரேசா ஃபிரோஸ்ஜா" 21 புள்ளிகளுடன் 4–வது இடத்தையும், இளம் இந்திய கிராண்ட் மாஸ்டரான "டி.குகேஷ்" 16 புள்ளிகளுடன் 6–வது இடத்தையும் பிடித்தனர். 5 முறை உலக சாம்பியனான "விஸ்வநாதன் ஆனந்த்" 7–வது இடத்துடன் தொடரை நிறைவு செய்தார்.

## வில்வித்தையில் தங்கம் வென்று "பார்த் சலுங்கே" சாதனை



- "இளையோருக்கான உலக வில்வித்தை சாம்பியன்ஷிப்பில்" ஆடவருக்கான, ரீகர்வ் பிரிவில் இந்தியாவின், "பார்த் சலுங்கே" தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்தார்.
- அயர்லாந்தில் உள்ள லிமெரிக் நகரில், இளையோருக்கான உலக வில்வித்தை சாம்பியன்ஷிப் போட்டி நடைபெற்றது. இதில் 21 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆடவர் ரீகர்வ் பிரிவில் இந்தியாவின் பார்த் சலுங்கே இறுதிப் போட்டியில் 7–3 என்ற கணக்கில் கொரியாவின் "சாங் இன்ஜுனை" தோற்கடித்து தங்கப் பதக்கம் வென்றார்.
- இதன் மூலம் "இளையோருக்கான உலக வில்வித்தையில் ரீகர்வ் பிரிவில் தங்கப் பதக்கம் வென்ற முதல் இந்திய வீரர்" என்ற சாதனையை படைத்தார் பார்த் சலுங்கே.
- 21 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் ரீகர்வ் பிரிவில் இந்தியாவின் "பாஜா கவுர்" 7–1 என்ற கணக்கில் சீன தைபேவின் "சு ஷின் யுவை" வீழ்த்தி வெண்கலப் பதக்கம் வென்றார்.

- இளையோருக்கான உலக வில்வித்தை சாம்பியன்ஷிப் தொடரை இந்தியா 6 தங்கம், ஒரு வெள்ளி, 4 வெண்கலம் என 11 பதக்கங்களுடன், பட்டியலில் 2–வது இடம் பிடித்து நிறைவு செய்தது.
- கொரியா 6 தங்கம், 4 வெள்ளி பதக்கங்களுடன் முதலிடம் பிடித்தது.

## அறிவியல் & தொழில்நுட்பம்

### செய்தி வாசிப்பாளருக்குப் போட்டியாக 'லிசா' AI செய்தி வாசிப்பாளர்!



- ஒடிஸா மாநிலத்தில் 'ஒடிவி ' தனியார் தொலைக்காட்சி 'லிசா' எனும் செயற்கை நுண்ணறிவுப் பெண் செய்தி வாசிப்பாளரை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஒடிஸாவில் நெய்யப்படும் பாரம்பரிய கைத்தறி சேலையை உடுத்தி ஒடியா மற்றும் ஆங்கில மொழியில் செய்தி வாசிக்கும் வகையில் 'லிசா' வடிவைக்கப்பட்டுள்ளது.
- எண்ணற்ற மொழிகளை பேசும் திறனுடைய லிசா, தற்போது ஒடியா மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளை மட்டும் பேசும்படி உருவாக்கப்பட்டுள்ளது.
- விரைவில் மற்ற இந்திய மொழிகளிலும் ஒடியா மொழியில் மிகுந்த புலமையுடன் செய்திகளைத் தொகுத்து வழங்கும் படியாக நிரலாக்கம் செய்யப்படவுள்ளது.
- 'லிசா' அறிமுகம் செய்யப்பட்ட நிகழ்வில் காணொலி வாயிலாக உரையாற்றிய 'லிசா' தன்னை உருவாக்கிய ஒடிவிக்கு நன்றி தெரிவித்து, இனிவரும் காலங்களில் தான் தொகுத்து வழங்க இருக்கும் செய்திகளை அனைவரும் காண வேண்டும் என்று பேசியது.
- வேண்டிய முக பாவனைகள், விருப்பப்பட்ட ஆடைகளை 'லிசா' மாற்றிக்கொண்டது.

## மாநில நடப்பு நிகழ்வுகள்

### இந்தியாவின் G20 பிரசிடென்சியின் கீழ் உள்ள கலாச்சார பணிக்குழு, 'லம்பாணி பொருட்களை அதிக அளவில் காட்சிப்படுத்தியதற்காக கின்னஸ் உலக சாதனை படைத்துள்ளது.




- கர்நாடக மாநிலம் ஹம்பியில் நேற்று நடைபெற்ற ஜி–20 கலாச்சார பணிக்குழு கூட்டத்தையொட்டி, பெங்களூருவில் லம்பாணி பொருட்களை அதிக அளவில் காட்சிப்படுத்தியதற்காக கின்னஸ் சாதனை படைத்தது.

- "சந்தூர் குஷாலா கலா கேந்திராவுடன்", தொடர்புடைய 450க்கும் மேற்பட்ட லம்பானி பெண் கைவினைஞர்கள் மற்றும் கலாச்சார பயிற்சியாளர்கள் இணைந்து 1755 பேட்ச்வொர்க்குகளைக் கொண்ட, "G1 குறியிடப்பட்ட சந்தூர் லம்பானி எம்பிராய்டரியை" உருவாக்கினர்.

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

### "மகளிர் உரிமைத் தொகை திட்டம்" மூன்றடுக்கு நிலைகளில் செயலாக்கம்




- கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் "செப். 15–ஆம் தேதி" முதல் நடைமுறைக்கு வரவுள்ளது.
- 'கலைஞர் மகளிர் உரிமைத் தொகை' திட்டத்தைச் செயல்படுத்தவும் கண்காணிக்கவும் மூன்றடுக்கு நிலைகளில் குழுக்கள் அமைக்கப்பட உள்ளன.
- **மாவட்ட அளவில்,** கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை செயல்படுத்தும் பணிகளை ஆட்சியர் மேற்கொள்வார்.
- சென்னை மாநகராட்சிப் பகுதியில், "மாநகராட்சி ஆணையரே" திட்டத்தைச் செயல்படுத்தும் அதிகாரியாக இருப்பார்.
- **வட்டஅளவில் மாவட்ட–குழுக்கள்**: ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட அளவிலும், வட்ட அளவிலும் தனித்தனி குழுக்களை ஆட்சியர்கள் அமைக்க வேண்டும்.
- மாவட்ட அளவிலான "குழுவில் 15" பேர் இருப்பர். "மாவட்ட ஆட்சியர்" இதற்கு தலைவராக இருப்பார்.
- வட்ட அளவிலான குழுவுக்கு "வருவாய் கோட்டாட்சியர்" தலைவராக இருப்பார்.
- வட்ட, மாவட்ட அளவிலான குழுவுடன், "மாநில அளவில்,
- தலைமைச் செயலர்" தலைமையில் கண்காணிப்புக் குழு அமைக்கப்படும்.
- **கட்டுப்பாட்டு அறை:** உரிமைத் தொகை திட்டத்துக்கென தனியாக, மாவட்ட அளவிலும், வட்ட அளவிலும் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்படும்.

## தேசிய நடப்பு நிகழ்வுகள்

### புதுதில்லியில் 50வது ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டம்



- இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் 50வது ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டம் டெல்லியில் உள்ள விஞ்ஞான் பவனில் இன்று நடைபெறுகிறது.
- இந்த கூட்டத்தில் நிதித்துறை இணை அமைச்சர் பங்கஜ் சவுத்ரி, மாநிலங்கள் மற்றும் யூனியன்

பிரதேசங்களின் நிதி அமைச்சர்கள் மற்றும் மூத்த அதிகாரிகள் கலந்து கொள்கின்றனர்.

- ❖ இந்த ஆண்டு பிப்ரவரியில், புதுதில்லியில் திருமதி சீதாராமன் தலைமையில் 49வது ஜிஎஸ்டி கவுன்சில் கூடியது.
- ❖ அந்தக் கூட்டத்தில், மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு 2022 ஜூன் மாதத்திற்கான நிலுவையில் உள்ள மொத்த ஜிஎஸ்டி இழப்பீடான 16 ஆயிரத்து 982 கோடி ரூபாயை வழங்க அரசாங்கம் முடிவு செய்தது.

## சில்லறை விலையை கட்டுப்படுத்த, "இந்திய உணவுக் கழகம்" அரிசியின் மின்–ஏலத்தை தொடங்கியது



- ❖ பொதுமக்களின் நலன் கருதி பொதுமக்களின் நலன் கருதி, திறந்த சந்தை விற்பனைத் திட்டத்தின் கீழ்(OMSS),அரிசியை மின் ஏலத்தில் விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளதாக, "நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம்" தெரிவித்துள்ளது.
- ❖ வானிலை சீர்கேடு காரணமாக அரிசி வரத்து குறைய வாய்ப்பு உள்ளதால், மக்களின் உணவு தானிய தேவையை பூர்த்தி செய்ய அதிகளவு அரிசி வழங்கப்பட்டுள்ளது.
- ❖ சில்லறை விலையைக் கட்டுப்படுத்தவும், எந்த நேரத்திலும் அரசாங்கத்திடம் போதுமான அளவு இருப்பு உள்ளது, என்ற செய்தியை சந்தைக்கு அனுப்பவும் இந்திய உணவுக் கழகம் அரிசியின் மின்–ஏலத்தை தொடங்கியுள்ளது.
- ❖ "2023–24 ஆம் ஆண்டின் மூன்றாவது மின்–ஏலம்" நாளை திட்டமிடப்பட்டுள்ளது.

## "ஸ்வச் பாரத் மிஷன்–நகர்ப்புறம் 2.0"




நாடு முழுவதும் "ஸ்வச் பாரத் மிஷன் (SBM) நகர்ப்புற 2.0 திட்டம்" மற்றும் செயல்படுத்தலின் அளவை மதிப்பிடுவதற்கும், விரைவுபடுத்துவதற்கும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் ஆய்வு மற்றும் பட்டறைக்கு ஏற்பாடு செய்துள்ளது.

தற்போது நடைபெற்று வரும் "ஸ்வச் சர்வேக்ஷன்", நிலத்தடி சுகாதாரம் மற்றும் கழிவு மேலாண்மை நிலையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காண உருவாக்கப்பட்டுள்ளது.

"2026க்குள் 3–நட்சத்திர குப்பை இல்லா மதிப்பீடு" மற்றும் இந்த லட்சிய இலக்கிற்கு, வழக்கமான திட்டமிடல், கண்காணித்தல், மதிப்பீடு செய்தல் மற்றும் சரிசெய்தல் நடவடிக்கைகளை செயல்படுத்துவதில், விரைவான முயற்சிகள் தேவைப்படும் எனவும் அமைச்சகம் தெரிவித்துள்ளது .

SHANMUGAM IAS ACADEMY

**ஜல் சக்தி அமைச்சகம்**

- மத்திய அமைச்சர் – கஜேந்திர சிங் ஷெகாவத்
- மாநில அமைச்சர்– பிரஹலாத் சிங் படேல்; பிஷ்வேஸ்வர் துடு.

### "தேசிய நீர் இயக்கம்"



- ஜல் சக்தி அமைச்சகத்தின் தேசிய நீர் இயக்கத்தின் (NWM) கீழ் உள்ள நீர் பயன்பாட்டு திறன் பணியகம் (BWUE), இந்திய பிளம்பிங் அசோசியேஷன் (IPA) உடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MOU) கையெழுத்திட்டுள்ளது.
- புரிந்துணர்வு ஒப்பந்தம், "மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள், நீர் தணிக்கை" ஆகியவற்றை ஏற்படுத்துவதையும் மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## சர்வதேச நடப்பு நிகழ்வுகள்

### கடற்படைக்கு 26 ரஃபேல் விமானங்கள், 3 நீர்மூழ்கி கப்பல்கள் வாங்க ஒப்பந்தம்



- பிரதமர் நரேந்திர மோடி வரும் 13, 14 ஆகிய தேதிகளில் பிரான்ஸ் நாட்டில் 2 நாள் அரசுமுறைப் பயணம் மேற்கொள்கிறார். 14–ம் தேதி பாரிஸ் நகரில் நடைபெற உள்ள "பிரான்ஸ் தேசிய தின விழாவில்" சிறப்பு விருந்தினராக பிரதமர் மோடி பங்கேற்கிறார்.
- இந்தியா – பிரான்ஸ் இடையே யான உறவின் 25–ம் ஆண்டை முன்னிட்டு, தேசிய தின அணிவகுப் பில் அந்நாட்டு படையினருடன் இந்தியப்படையினரும் இணைவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்நிலையில் பிரதமர் மோடியின் இப்பயணத்தில் இந்திய கடற்படையின்" ஐஎன்எஸ் விக்ராந்த் விமானம்" தாங்கி கப்பலுக்காக "26 ரஃபேல் போர் விமானங்களை" கொள்முதல் செய்யவும் பிரான்ஸ் தொழில்நுட்ப உதவியுடன் "இந்தியாவில் தயாரிப்போம்" திட்டத்தின் கீழ் "மும்பை மசாகான் கப்பல் கட்டும் தளத்தில் மேலும் 3 நீர்மூழ்கி கப்பல்கள் தயாரிக்கவும்" ஒப்பந்தம் கையெழுத்தாகும் என கூறப்படுகிறது.

### 'ஆபரேஷன் (பரந்த) பிராடர் வாள்'

- இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து சட்டவிரோத போதைப்பொருட்களை எதிர்த்துப் போராடுவதற்கு 'ஆபரேஷன் (பரந்த) பிராடர் வாள்' நடத்துகின்றன.

SHANMUGAM IAS ACADEMY



- சர்வதேச அஞ்சல் அமைப்பைப் பயன்படுத்தி அனுப்பப்படும் சட்டவிரோத மற்றும் சட்டவிரோத மருத்துவப் பொருட்களைக் கண்டறிய, அமெரிக்காவும் (யுஎஸ்ஏ) மற்றும் இந்தியாவும் "ஆபரேஷன் பிராடர் வாள்" என்ற இருதரப்பு பல–நிறுவன அமலாக்க முயற்சியை மேற்கொண்டன.
- 2023 ஆம் ஆண்டு ஜூன் 12 ஆம் தேதி முதல் 23 ஆம் தேதி வரை நடைபெற்ற இந்த நடவடிக்கை, அமெரிக்காவின் நியூயார்க்கில் உள்ள ஜான் எஃப் கென்னடி சர்வதேச விமான நிலையம் மற்றும் அமெரிக்காவின் சிகாகோவில் உள்ள ஓ'ஹேர் சர்வதேச விமான நிலையத்தில் உள்ள சர்வதேச அஞ்சல் வசதிகள் (ஐஎம்எஃப்) மூலம் இந்தியாவிலிருந்து அமெரிக்காவிற்கு வரும் ஏற்றுமதிகளை இலக்காகக் கொண்டது.

SHANMUGAM IAS ACADEMY